# குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றம், கரூர்.

**முன்னிலை:-** திரு.எஸ்.பி. பரத்குமார் எம்.பி.ஏ., எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.

தமிழ் பராபவ வருடம், சித்திரை மாதம் 02 ஆம் நாள்,
2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் நாள், புதன்கிழமை,

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 416/2022**

| | | | |
|---|---|---|---|
| 1) | CNR Number | | **TNKR**02-001683-2022 |
| 2) | குற்றமுறையிடுபவர் மற்றும் எதிரி பெயர், விலாசம் | | தமிழ்நாடு அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>கரூர் நகர காவல் நிலையம்,<br>கா.நி. குற்ற எண்.566/2018.<br><br>எதிரியின் மீது இ.த.ச. 294(b), 326 மற்றும் 506(ii) ஆவது பிரிவுகளின் கீழ்.<br><br>// எதிரி //<br>கோபி(52/2025),<br>த/பெ.ராமலிங்கம்,<br>அண்ணா நகர்,<br>கரூர் மாவட்டம். |
| 3) | குற்றம் நடந்த நாள் | | 29.07.2018 |
| 4) | முறையிட்ட நாள் | | 02.08.2018 |
| 5) | முதல் தகவல் அறிக்கை பெறப்பட்ட நாள் | | 06.08.2018 |
| 6) | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | | எதிரி முன்பிணையம் பெற்றதால் கைது நடவடிக்கை இல்லை |
| 7) | எதிரி முதன் முதலாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்ட நாள் | | 06.01.2023 |
| 8) | எதிரி பிணையில் விடப்பட்ட நாள் | | எதிரி முன்பிணையம் பெற்றதால் கைது நடவடிக்கை இல்லை |
| 9) | எதிரி காவலில் இருந்த நாட்கள் | | இல்லை |
| 10) | குற்றப்பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | | 25.08.2022 |

<table>
<tr><td>11)</td><td>அரசு தரப்பு வழக்கறிஞர் நிலை-2,கரூர் அவர்களின் பெயர்</td><td></td><td>திரு. தண்டபாணி,</td></tr>
<tr><td>12)</td><td>எதிரி தரப்பு வழக்கறிஞர் பெயர்</td><td></td><td>திரு. M.வெங்கடேஷ்வரன்,</td></tr>
<tr><td>13)</td><td>எதிரியிடம் கு.வி.முச. 240-பிரிவின்படி கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td></td><td>04.05.2023</td></tr>
<tr><td>14)</td><td>நீதிமன்றத்தால் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு</td><td></td><td>எதிரியின் மீது இ.த.ச. 294(b), 326 மற்றும் 506(ii) ஆவது பிரிவுகளின் கீழ்.</td></tr>
<tr><td>15)</td><td>எதிரியின் பதில்</td><td></td><td>எதிரி குற்றச்சாட்டை மறுத்தார்.</td></tr>
<tr><td>16)</td><td>சாட்சிகளை முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td></td><td>
<table>
<tr><td></td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1.</td><td>21.07.2023</td><td>24.03.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>21.07.2023</td><td>24.03.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>02.04.2024</td><td>02.04.2024</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>02.04.2024</td><td>02.04.2024</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>24.06.2024</td><td>24.06.2024</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>24.06.2024</td><td>24.06.2024</td></tr>
<tr><td>அ.சா.7</td><td>11.03.2025</td><td>11.03.2025</td></tr>
<tr><td>அ.சா.8</td><td>25.03.2026</td><td>25.03.2026</td></tr>
</table>
</td></tr>
<tr><td>17)</td><td>அனைத்து பலதரப்பட்ட மனுக்களும் கோப்பிற்கு எடுக்கப் பட்ட நாள் -அவற்றிற்கான முடிவு, (மேல் நீதிமன்றங்களில் சேலஞ்ச் மனுக்கள் உட்பட) (routine மனுக்கள் கு.வி.மு ச. 317 போன்றவற்றை தவிர்த்து)</td><td></td><td>இல்லை</td></tr>
<tr><td>18)</td><td>எதிரியை கு.வி.மு.ச. 313(1)(ஆ) பிரிவின்படி வினவப் பட்ட நாள்</td><td></td><td>01.04.2026</td></tr>
<tr><td>19)</td><td>தலை மறைவு எதிரிகள் யாராவது இருப்பின் அவர் ஆஜரான நாள், ஆஜர் படுத்தப்பட்ட நாள் போன்ற விவரங்கள்</td><td></td><td>ஒருவருமில்லை.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 20) | உயர் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள stay மனு மற்றும் அதில் பிறப்பிக்கப்பட்ட முடிவு | | ஏதுமில்லை. |
| 21) | வழக்கில் விசாரணைக்காக உத்தரவிடப்பட்ட நாள் | | 26.09.2022 |
| 22) | விசாரணை முடிவுற்ற நாள் | | 07.04.2026 |
| 23) | நடுவரின் தீர்மானம் | | எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. |
| 24) | முடிவு | | எதிரி குற்றம் சாட்டப்பட்டபடி குற்றவாளி என முடிவு செய்யப்பட்டது. |
| 25) | எதிரிக்கு, இத்தீர்ப்பாணையின் இலவச நகல் வழங்கப்பட்ட நாள் | | 15.04.2026 |
| 26) | தீர்ப்பு நாள் | | 15.04.2026 |

## தீர்ப்புரை

1) கடந்த 29.07.2018 ம் தேதி இரவு 20.45 மணிக்கு கரூர் நகர காவல்நிலைய சரகம் கரூர் கௌரிபுரத்தில் உள்ள கங்கா பார்சல் ஆபிசில் இவ்வழக்கில் சாட்சிகள் 1 மற்றும் 2 ஆகியோர்கள் இருந்தபோது எதிரி கார்த்திகேயன் என்பவர் அருவாளுடன் அங்கு வந்தவர் 29.07.2018 ம் தேதி மாலை கரூர் அண்ணாநகர் 4 வது ரோட்டில் நடந்த சம்பவத்தை மனதில் வைத்துக்கொண்டு சாட்சிகள் 1 மற்றும் 2 ஆகியோர்களைப் பார்த்து ஏண்டா தேவடியா பயலுகளே இப்ப வாங்கடா பார்க்கலாம் என்று கெட்டவார்த்தையால் திட்டிக்கொண்டே சாட்சி1 ஐ இடதுகை மணிக்கட்டுக்கு கீழ் அருவாளால் வெட்டி கொடுங்காயத்தை ஏற்படுத்தியும் அப்போது தடுக்க வந்த சாட்சி2 ஐ இடது நெற்றி, இடது காது, இடது கை ஆகிய இடங்களில் அருவாளால் வெட்டி கொடுங்காயத்தை ஏற்படுத்தியும் பின் எதிரி சாட்சிகள் 1 மற்றும் 2 ஆகியோர்களை பார்த்து கையில் வைத்திருந்த அருவாளை ஓங்கி காட்டி இன்னைக்கு தப்பிச்சுட்டீங்க என்னைக்கு இருந்தாலும் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியுள்ளார். எனவே எதிரி கோபி என்பவரது செய்கையானது சட்டப்பிரிவு இ.த.ச. 294(b), 326, மற்றும் 506(ii) ஆகிய பிரிவுகளின் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கரூர் நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் காவல் நிலைய குற்ற எண்.566/2018 ல் எதிரியின் மீது

குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி குற்றப்பத்திரிக்கை இந்நீதிமன்றக் கோப்பில் இவ்வழக்காக சி.சி.எண்.416/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2) மேற்படி எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும், கு.வி.மு.ச. 207-ஆவது பிரிவுபடி எதிரிக்கு வழங்கப்படவேண்டிய அரசுதரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

3) எதிரி மீதான குற்ற சாராம்சம் குறித்து எடுத்துக்கூறி வினவியபோது எதிரி குற்றச்சாட்டை மறுத்து தான் குற்றவாளி இல்லை என்று கூறினார். இருதரப்பும் கேட்டும், இவ்வழக்காவணங்களை ஆராய்ந்தும், எதிரியின் மீது இ.த.ச.294(b), 326, மற்றும் 506(ii) ஆவது பிரிவுகளின் படி குற்றச்சாட்டு வனைந்து வாசித்து, விளக்கிக் கூறி வினவிய போதும் எதிரி அக்குற்றச்சாட்டையும் மறுத்துள்ளார். எனவே, இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்காக உத்தரவிடப்பட்டு அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

4) இவ்வழக்கில் அரசுதரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.8 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>5) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :-</u>

i) இவ்வழக்கில் **அ.சா.1**, தனது சாட்சியத்தில், "நான் அண்ணா நகர், முதல் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் லோடு மேனாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். விமல், ஆறுமுகம், சதீஸ், தினேஷ் ஆகியோர்கள் எனது நண்பர்கள் ஆவார்கள். கடந்த 29.07.2018ம் தேதி அண்ணா நகர் 4ரோட்டில் நின்று கொண்டிருந்தோம். ஆஜர் எதிரி அங்கு மதியம் சுமார் 02.30 மணியளவில் வந்து எனது நண்பர் விமலை கிண்டலாக பேசினார். அதை நான் கேட்டேன். அப்போது அதைக் கேட்டதற்கு ஆஜர் எதிரி ஏன்டா தேவடியா புண்ட மவனே, நீ என்ன சப்போட்டா என்று கேட்டார். அருகில் இருந்த நண்பர்கள் பேசி கோபியையும் என்னையும் அனுப்பி வைத்தனர். நாங்கள் சென்றுவிட்டோம். அன்றைய தினம் இரவு சுமார் 08.45 மணியளவில் கௌரிபுரம், கங்கா பார்சல் சர்வீஸில் தெரிந்தவரைப் பார்ப்பதற்காக நான், ஆறுமுகம், சதீஸ், தினேஷ் ஆகியோர்கள் சென்றிருந்தோம். அப்போது ஆஜர் எதிரி அங்கு அருவாளை எடுத்து வந்து என்னை ஏன்டா தேவடியா புண்ட மவனே என்னைத் திட்டி

இப்ப வாடா பார்க்கலாம் என்று திட்டி அருவாளால் வெட்ட வந்தார். அப்போது தடுத்தபோது இடது கையில் வெட்டுப்பட்டது. சாட்சி தனது இடது கையில் உள்ள வெட்டுக்காயத் தழும்பை காண்பித்தார்) சம்பவத்தை பார்த்த ஆறுமுகம் தடுக்க வந்தபோது, அவரை தலை, கை, காது, இடது கை கட்டை விரலிலும் வெட்டிவிட்டார். அதனால் ஆறுமுகத்திற்கு விரல் துண்டாகிவிட்டது. பின்னர் எதிரி எங்களைப்பார்த்து இன்று தப்பித்துவிட்டீர்கள். என்னைக்கா இருந்தாலும் உங்களைக் கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி அருவாளுடன் ஓடிவிட்டார். பின்னர் காயமடைந்த எங்களை தினேஷ் ஆம்புலன்ஸ் மூலம் கரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தார். மறுநாள் காலை போலிசார் என்னை வந்து விசாரித்தனர். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1**. போலிசார் என்னை விசாரித்தனர் " என சாட்சியமளித்துள்ளார்.

ii) இவ்வழக்கில் **அ.சா.2**, தனது சாட்சியத்தில், "நான் புலியூர், ஆசிரியர் காலனியில் குடியிருந்து வருகிறேன். நான் எலக்ட்ரீசியன் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். விமல், சதீஸ், தினேஷ் ஆகியோர்கள் எனது நண்பர்கள் ஆவார்கள். கடந்த 29.07.2018 ஆம் தேதி அண்ணா நகர் 4 ரோட்டில் நின்று அ.சா.1 மற்றும் எனது நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தோம். ஆஜர் எதிரி அங்கு மதியம் சுமார் 02.30 மணிக்கு மேல் இருக்கும். அப்போது அங்கு வந்து எனது நண்பர் விமலை கிண்டலாக பேசினார். அதற்கு வாக்குவாதம் ஏற்பட்டது. அதை அ.சா.1 கேட்டார். அப்போது ஆஜர் எதிரி அ.சா.1 ஐ பார்த்து ஆஜர் எதிரி ஏன்டா தேவடியா புண்ட மவனே, நீ என்ன சப்போட்டா என்று கேட்டார். அப்போது நாங்கள் பேசி கோபியையும் அ.சா.1 ஐயும் அனுப்பி வைத்தோம். பின்னர் அன்றைய தினம் இரவு சுமார் 08.45 மணியளவில் கௌரிபுரத்தில் உள்ள கங்கா பார்சல் சர்வீஸில் உள்ள ஒருவதைப் பார்ப்பதற்காக அ.சா.1 உடன் நான், தினேஷ், சதீஸ் ஆகிய நால்வரும் சென்றிருந்தோம். அப்போது ஆஜர் எதிரி அருவாளுடன் அங்கு வந்து இப்ப வாங்கடா தேவடியா புண்ட மவனே என்று திட்டி அ.சா.1 ஐ வெட்ட முற்பட்டபோது அவர் தனது இடதுகையால் தடுத்ததில், அவருக்கு இடது கை மணிக்கட்டில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. அதைப் பார்த்த நான் தடுக்க சென்ற என்னை கோபி இடது நெற்றி, இடது கை கட்டைவிரல், இடது காது ஆகிய இடங்களில் வெட்டினார். அதில் எனக்கு இடது கை கட்டைவிரல் கட்டாகிவிட்டது. (சாட்சி தனது இடது கை கட்டைவிரல் வெட்டுப்பட்ட இடத்தை காண்பித்தார்). பின்னர் தினேஷ் மற்றும் சதீஷ் ஆகியோர் கோபியை விரட்டி பிடிக்க முற்பட்டபோது எதிரி இப்போது தப்பித்துவிட்டீர்கள். என்னைக்கா இருந்தாலும்

உங்களைக் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு அருவாளுடன் சென்று விட்டார். பின்னர் காயமடைந்த எங்களை தினேஷ் ஆம்புலன்ஸ் மூலம் கரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தார். மறுநாள் காலை போலிசார் என்னை வந்து விசாரித்தனர்" என சாட்சியமளித்துள்ளார்.

iii) இவ்வழக்கில் **அ.சா.3**, தனது சாட்சியத்தில், "நான் அண்ணாநகரில் குடியிருந்து மோட்டார் வேலை செய்து வருகிறேன். கார்த்திகேயன் மற்றும் ஆறுமுகத்தை எனக்கு தெரியும். 29.08.2018 ம் தேதியில் சுமார் காலை 11.00 மணிக்கு ஆறுமுகமும் கார்த்திகேயனும் சண்டை போட்டுக்கொண்டதாக கேள்விப்பட்டு சம்பவம் நடந்த இடத்தைப் போய் பார்த்தேன். அங்கு ஒருவரும் இல்லை. இரவும் சண்டை நடந்ததாக கேள்விப்பட்டு அங்கு சென்று சம்பவ இடத்தைப் போய் பார்த்தோம். அங்கு யாரும் இல்லை. சம்பவ இடத்தில் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் என்ன நடந்தது என்று தெரியாது என்று சொன்னேன். நான் சண்டையை நேரில் பார்க்கவில்லை. ஆஜர் எதிரி யார் என்று எனக்கு தெரியாது" என சாட்சியமளித்துள்ளார்.

iv) இவ்வழக்கில் **அ.சா.4**, தனது சாட்சியத்தில், "நான் அண்ணாநகரில் குடியிருந்து லோடுமேனாக வேலை செய்து வருகிறேன். கார்த்திகேயன் மற்றும் ஆறுமுகம் மற்றும் தினேஷ் எனக்கு தெரியும். 29.08.2018 ம் தேதியில் சுமார் காலை 11.00 மணிக்கு ஆறுமுகமும் கார்த்திகேயன், விமல், மணி சண்டை போட்டுக்கொண்டதாக கேள்விபட்டேன். நான் சண்டையை நேரில் பார்க்கவில்லை. ஆஜர் எதிரி யார் என்று எனக்கு தெரியாது. போலிசார் விசாரணையில் சண்டை கட்டிக்கொண்டார்கள் என்று தான் சொன்னேன். அதைப் பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னேன்" என சாட்சியமளித்துள்ளார்.

v) இவ்வழக்கில் **அ.சா.5**, தனது சாட்சியத்தில், "நான் தற்போது செங்குந்தபுரத்தில் குடியிருந்து சொந்தமாக வியாபாரம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள முதல் கையொப்பம் என்னுடையது. என்னுடன் பாலகண்ணன் என்பவர் கையொப்பம் செய்தார். கடந்த 02.08.2018 ம் தேதி கரூர் நகர போலிசார் கௌரிபுரம் கங்கா பார்சல் சர்வீசிற்கு வந்து சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்தனர். சம்பவ இடத்தில் தயார் செய்த பார்வை மகசரில் நானும், பாலகண்ணனும் கையொப்பம் செய்து கொடுத்தோம். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2.** போலிசார் என்னை விசாரித்தனர்" என சாட்சியமளித்துள்ளார்.

vi) இவ்வழக்கில் **அ.சா.6**, தனது சாட்சியத்தில், "நான் தற்போது கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தோல்நோய் சிறப்பு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.07.2018ம் தேதி இரவு 09.40 மணியளவில் நான் பணியிலிருந்தபோது ஆறுமுகம் என்பவரை அவரது நண்பர் தினேஷ் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை நான் பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவர் தன்னை இரவு 08.45 மணியளவில் கங்கா பார்சல் அலுவலகத்தில் தூங்கிக்கொண்டிருந்தபோது தெரிந்த ஒரு நபர் கத்தி போன்ற ஆயுதத்தால் தாக்கியதாக ஏற்பட்ட காயங்கள் என கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது காயம் 1, 5x 2 cm எலும்பு ஆளமுடைய கிழிந்த காயம் தலையின் இடதுபுறத்தில் காணப்பட்டது. காயம் 2. 7x 2 cm எலும்பு ஆழமுடைய முக்கால்வாசி வெட்டுப்பட்ட இடது கட்டைவிரல் வெட்டுப்பட்டு காணப்பட்டது. காயம் 3. 2 x 1x 0.05 cm கிழிந்த காயம் இடது காதில் காணப்பட்டது. அவரை நான் உள்நோயளியாக அனுமதித்து சிகிச்சையளிக்கப்பட்டது. அவருக்கு இடது கைக்கு நுண்கதிர் படம் எடுக்கப்பட்டது. அவருக்கு அதில் முதல் மெட்டாக்கார்ப் எலும்பு முறிவு காணப்பட்டது. முகத்திற்கு சிடிஸ்கேன் எடுக்கப்பட்டது. அதில் இடது முன்பக்க தலை left frontal எலும்பு உடைந்து காணப்பட்டது. அவருக்கு எலும்பு முறிவு மருத்துவர் அளித்த சிகிச்சையின் கருத்துரைப்படி அவர் மருத்துவரின் ஆலோசனைக்கு புறம்பாக தன்னிச்சையாக மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவர் மருத்துவமனையில் இருந்தபோது அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையின் அடிப்படையில் காயம் 1, காயம் 2 கொடுங்காயம் என சாட்றளித்தேன். **அந்த விபத்து பதிவேட்டு அறிக்கை, காயச்சான்றிதழ் முறையே அ.சா.ஆ.3, 4.** அன்றைய தினமே அதே சம்பவத்தில் காயமடைந்ததாக கார்த்திகேயம் என்பவரை அவரது நண்பர் தினேஷ் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரைநான் பரிசோதித்தபோது அவர் தன்னை இரவு 08.45 மணியளவில் கங்கா பார்சல் சர்வீஸ் அலுவலகத்தில் தெரிந்த ஒரு நபர் கத்தி போன்ற ஆயுதத்தால் தன்னை தாக்கியதாகவும், அதனால் காயம் ஏற்பட்டதாகவும் கூறினார். அவருக்கு ஏற்பட்ட காயம் 1. 6x3 cm எலும்பு ஆழமுடைய கிழிந்த காயம் இடது மணிக்கட்டில் காணப்பட்டது. காயம் 2. 5x3 cm சதையளவு ஆழமுடைய கிழிந்த காயம் இடது முன்கையில் காணப்பட்டது. காயம் 3. 4x2 cm சதையளவு ஆழமுடைய கிழிந்த காயம் இடது முன்கையில் காணப்பட்டது. அவரை நான் உள்நோயாளியாக அனுமதிக்க பரிந்துரைத்தேன். **அந்த கார்த்திகேயனுக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டுஅறிக்கை அ.சா.ஆ.5.** போலிசார் என்னை விசாரித்தனர்" என சாட்சியமளித்துள்ளார்.

vii) இவ்வழக்கில் **அ.சா.7**, தனது சாட்சியத்தில், " நான் தற்போது கரூர் ராஜ் ஆர்த்தோ மருத்துவமனையில் எலும்பு முறிவு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 30.07.2018 அன்று இரவு 02.00 மணியளவில் பணியிலிருந்தபோது, கார்த்திகேயன் த/பெ. சுப்பிரமணியன் என்பவர் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார். அப்போது அவர் கரூர், கௌரிபுரத்திலுள்ள கங்கா பார்சல் சர்வீஸ் அருகில் அடையாளம் தெரிந்த நபர் கத்தியால் தாக்கியதால் இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டு அழைத்து வரப்பட்டார். அவரை பரிசோதனை செய்து உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று காயச்சான்றிதழ் வழங்கியுள்ளேன். **அந்த காயச்சான்றிதழ் அ.சா.ஆ.6.** மேற்சொன்ன ஆயுதத்தால் தாக்கப்படும்போது மேற்சொன்ன காயம் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிசார் என்னை விசாரித்தனர்" என சாட்சியமளித்துள்ளார்.

viii) இவ்வழக்கில் **அ.சா.8**, தனது சாட்சியத்தில், "நான் தற்போது கரூர் நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.08.2018 ம் தேதி காலை 16.00 மணிக்கு உதவி ஆய்வாளர் ராஜேஸ்வரி நிலைய பொறுப்பில் இருந்தபோது கார்த்திகேயன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துப்பூர்வமான புகாரைப் பெற்று நிலைய குற்ற எண்.566/2018, ச.பி. 294(பி), 324, 506(2) இ.த.ச வின்படி வழக்கு பதிவு செய்துள்ளார். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7.** அன்றைய தினம் 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8.** சாட்சிகள் தொடர்ந்து 1 முதல் 8 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரிகள் கரூர் அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று சென்றதால் கைது நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை. இவ்வழக்கில் காயம்பட்ட ஆறுமுகம் என்பவருக்கு சிகிச்சையளித்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் வழங்கிய கரூர் மருத்துவ கல்லூரி அரசு மருத்துவமனை மருத்துவர் முருகேசன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் காயம்பட்ட கார்த்திகேயன் என்பவருக்கு சிகிச்சையளித்து காயச்சான்றிதழ் வழங்கிய கரூர் மருத்துவ ராஜ் ஆர்த்தோ மருத்துவமனை மருத்துவர் அன்பழகன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மருத்துவர் வழங்கிய காயச்சான்றிதளில் கார்த்திகேயன் மற்றும் ஆறுமுகத்திற்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என காயச் சான்றிதழ் வழங்கியதால் இவ்வழக்கின் சட்டப் பிரிவை 294(பி), 324, 506(2)

இதசவிலிருந்து 294(பி), 326, 506(2) இதசவாக மாற்றம் செய்து அதன் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9.** இத்துடன் உதவி ஆய்வாளர் தனது புலன் விசாரணையை முடித்து குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்" என சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசுதரப்பு சாட்சி விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

6) அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்குப் பாதகமான சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச. 313(1)(ஆ)-ஆவது பிரிவின்படி எடுத்துக்கூறி வினவியபோது எதிரி அவற்றை பொய்சாட்சி, பொய் வழக்கு என்றார். எதிரி தன்னுடைய தரப்பில் விசாரிக்க சாட்சிகள் எவரும் இல்லை என்றார். இத்துடன் எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டது.

7) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் முன் வைக்கப்பட்ட வாய் மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

8) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரியின் மீது இ.த.ச. 294(b), 326 மற்றும் 506(ii) ஆவது பிரிவுகளின் கீழ் சாட்டப்பட்ட குற்றச்சாட்டை அரசுதரப்பால் தகுந்த முறையான ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

**<u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>**

9) அரசு தரப்பில், கடந்த 29.07.2018 ம் தேதி இரவு 20.45 மணிக்கு கரூர் நகர காவல்நிலைய சரகம் கரூர் கௌரிபுரத்தில் உள்ள கங்கா பார்சல் ஆபிசில் இவ்வழக்கில் சாட்சிகள் 1 மற்றும் 2 ஆகியோர்கள் இருந்தபோது எதிரி கார்த்திகேயன் என்பவர் அருவாளுடன் அங்கு வந்தவர் 29.07.2018 ம் தேதி மாலை கரூர் அண்ணாநகர் 4 வது ரோட்டில் நடந்த சம்பவத்தை மனதில் வைத்துக்கொண்டு சாட்சிகள் 1 மற்றும் 2 ஆகியோர்களைப் பார்த்து ஏண்டா தேவடியா பயலுகளே இப்ப வாங்கடா பார்க்கலாம் என்று கெட்டவார்த்தையால் திட்டிக்கொண்டே சாட்சி1 ஐ இடதுகை மணிக்கட்டுக்கு கீழ் அருவாளால் வெட்டி கொடுங்காயத்தை ஏற்படுத்தியும் அப்போது தடுக்க வந்த சாட்சி2 ஐ இடது நெற்றி, இடது காது, இடது கை ஆகிய இடங்களில் அருவாளால் வெட்டி கொடுங்காயத்தை ஏற்படுத்தியும் பின் எதிரி சாட்சிகள் 1 மற்றும் 2 ஆகியோர்களை பார்த்து கையில் வைத்திருந்த அருவாளை ஓங்கி காட்டி இன்னைக்கு தப்பிச்சுட்டீங்க என்னைக்கு

இருந்தாலும் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியுள்ளார். எனவே எதிரி கோபி என்பவரது செய்கையானது சட்டப்பிரிவு இ.த.ச. 294(b), 326, மற்றும் 506(ii) ஆகிய பிரிவுகளின் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கரூர் நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் காவல் நிலைய குற்ற எண்.566/2018 ல் எதிரியின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றத்தினை நிரூபிக்கும் முகமாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் மற்றும் இருதரப்பு வாதங்களையும் பின்வருமாறு பரிசீலிக்கப்பட்டது.

10) இவ்வழக்கின் அ.சா.1 கார்த்திகேயன் நிகழ்வு நிலை புகார்தாரர் மற்றும் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபர் ஆவார். அவர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில், “நான் அண்ணா நகர், முதல் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் லோடு மேனாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். விமல், ஆறுமுகம், சதீஸ், தினேஷ் ஆகியோர்கள் எனது நண்பர்கள் ஆவார்கள். கடந்த 29.07.2018 ம் தேதி அண்ணா நகர் 4 ரோட்டில் நின்று கொண்டிருந்தோம். ஆஜர் எதிரி அங்கு மதியம் சுமார் 02.30 மணியளவில் வந்து எனது நண்பர் விமலை கிண்டலாக பேசினார். அதை நான் கேட்டேன். அப்போது அதைக் கேட்டதற்கு ஆஜர் எதிரி ஏன்டா தேவடியா புண்ட மவனே, நீ என்ன சப்போட்டா என்று கேட்டார். அருகில் இருந்த நண்பர்கள் பேசி கோபியையும் என்னையும் அனுப்பி வைத்தனர். நாங்கள் சென்றுவிட்டோம். அன்றைய தினம் இரவு சுமார் 08.45 மணியளவில் கௌரிபுரம், கங்கா பார்சல் சர்வீஸில் தெரிந்தவரைப் பார்ப்பதற்காக நான், ஆறுமுகம், சதீஸ், தினேஷ் ஆகியோர்கள் சென்றிருந்தோம். அப்போது ஆஜர் எதிரி அங்கு அருவாளை எடுத்து வந்து என்னை ஏன்டா தேவடியா புண்ட மவனே என்னைத் திட்டி இப்ப வாடா பார்க்கலாம் என்று திட்டி அருவாளால் வெட்ட வந்தார். அப்போது தடுத்தபோது இடது கையில் வெட்டுப்பட்டது. சாட்சி தனது இடது கையில் உள்ள வெட்டுக்காயத் தழும்பை காண்பித்தார்) சம்பவத்தை பார்த்த ஆறுமுகம் தடுக்க வந்தபோது, அவரை தலை, கை, காது, இடது கை கட்டை விரலிலும் வெட்டிவிட்டார். அதனால் ஆறுமுகத்திற்கு விரல் துண்டாகிவிட்டது. பின்னர் எதிரி எங்களைப்பார்த்து இன்று தப்பித்துவிட்டீர்கள். என்னைக்கா இருந்தாலும் உங்களைக் கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி அருவாளுடன் ஓடிவிட்டார். பின்னர் காயமடைந்த எங்களை தினேஷ் ஆம்புலன்ஸ் மூலம் கரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தார். மறுநாள் காலை போலிசார் என்னை வந்து விசாரித்தனர். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது" என்று

கூறியுள்ளார்.

11) அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட ஆறுமுகம் என்பவர் சம்பவத்தின்போது அ.சா.1 னுடன் இருந்தவர் ஆவார். மேலும் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட நபர் ஆவார். அவர் தனது முதல்விசாரணை சாட்சியத்தில், "கடந்த 29.07.2018 ஆம் தேதி அண்ணா நகர் 4 ரோட்டில் நின்று அ.சா.1 மற்றும் எனது நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தோம். ஆஜர் எதிரி அங்கு மதியம் சுமார் 02.30 மணிக்கு மேல் இருக்கும். அப்போது அங்கு வந்து எனது நண்பர் விமலை கிண்டலாக பேசினார். அதற்கு வாக்குவாதம் ஏற்பட்டது. அதை அ.சா.1 கேட்டார். அப்போது ஆஜர் எதிரி அ.சா.1 ஐ பார்த்து ஆஜர் எதிரி ஏன்டா தேவடியா புண்ட மவனே, நீ என்ன சப்போட்டா என்று கேட்டார். அப்போது நாங்கள் பேசி கோபியையும் அ.சா.1 ஐயும் அனுப்பி வைத்தோம். பின்னர் அன்றைய தினம் இரவு சுமார் 08.45 மணியளவில் கௌரிபுரத்தில் உள்ள கங்கா பார்சல் சர்வீஸில் உள்ள ஒருவதைப் பார்ப்பதற்காக அ.சா.1 உடன் நான், தினேஷ், சதீஸ் ஆகிய நால்வரும் சென்றிருந்தோம். அப்போது ஆஜர் எதிரி அருவாளுடன் அங்கு வந்து இப்ப வாங்கடா தேவடியா புண்ட மவனே என்று திட்டி அ.சா.1 ஐ வெட்ட முற்பட்டபோது அவர் தனது இடதுகையால் தடுத்ததில், அவருக்கு இடது கை மணிக்கட்டில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. அதைப் பார்த்த நான் தடுக்க சென்ற என்னை கோபி இடது நெற்றி, இடது கை கட்டைவிரல், இடது காது ஆகிய இடங்களில் வெட்டினார். அதில் எனக்கு இடது கை கட்டைவிரல் கட்டாகிவிட்டது. (சாட்சி தனது இடது கை கட்டைவிரல் வெட்டுப்பட்ட இடத்தை காண்பித்தார்). பின்னர் தினேஷ் மற்றும் சதீஷ் ஆகியோர் கோபியை விரட்டி பிடிக்க முற்பட்டபோது எதிரி இப்போது தப்பித்துவிட்டீர்கள். என்னைக்கா இருந்தாலும் உங்களைக் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு அருவாளுடன் சென்று விட்டார். பின்னர் காயமடைந்த எங்களை தினேஷ் ஆம்புலன்ஸ் மூலம் கரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தார். மறுநாள் காலை போலிசார் என்னை வந்து விசாரித்தனர்" என்று கூறியுள்ளார்.

12) மேற்படி அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் சாட்சியங்களை ஒருசேர ஆராயும்போது, சம்பவ தினமான 29.07.2018 அன்று மதியம் 02.30 மணியளவில் அண்ணா நகர் 4 ரோட்டில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் விமல், சதீஸ், தினேஷ் ஆகியோர் பேசிக்கொண்டிருந்ததும் அப்போது எதிரி கோபி அங்கு வந்து விமல் என்பவரை கிண்டலாக பேசியதும் அதனை அ.சா.1 தட்டிக்கேட்டதற்கு வாக்குவாதம் ஏற்பட்டது என்பதும் அதற்கு எதிரி கோபி அ.சா.1 ஐப் பார்த்து ஏண்டா தேவடியா புண்ட

மவனே என்று திட்டி நீ என்ன அவனுக்கு சப்போட்டா என்று அ.சா.1 ஐ தகாத வார்த்தைகளால் திட்டியதும் பின்னர் அருகிலிருந்த நண்பர்கள் பேசி இருவரையும் அனுப்பிவிட்டதும் தெரியவருகிறது. பின்னர் அன்றையதினமே இரவு 08.45 மணியளவில் மேற்படி அ.சா.1, கௌரிபுரம், கங்கா பார்சல் சர்வீஸில் தெரிந்தவரைப் பார்ப்பதற்காக அவரது நண்பர்கள் அ.சா.1, அ.சா.2 ஆறுமுகம், சதீஸ், தினேஷ் ஆகியோர் சென்றபோது எதிரி அங்கு வந்து அ.சா.1 ஐப் பார்த்து இப்ப வாடா தேவடியா புண்டமவனே என தகாத வார்த்தைகளால் திட்டி அருவாளை எடுத்து வெட்டியதும் அ.சா.1 அதை தடுத்தபோது அவரது இடதுகையில் வெட்டியதும் அதனை தடுக்க சென்ற அ.சா.2 ஆறுமுகத்தை என்பவரை அவரது இடது நெற்றி, இடதுகை கட்டைவிரல், இடது காது ஆகிய இடங்களில் வெட்டியதும் அதில் அவருக்கு இடதுகை கட்டைவிரல் துண்டானதும் தெரியவருகிறது.

13) மேற்படி சம்பவம் நடந்த பிறகு உடனடியாக அ.சா.1 மற்றும் அ.சா.2 இருவரையும் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அ.சா.3 தினேஷ் என்பவரால் சிகிச்சைக்கு அழைத்து செல்லப்பட்டு உள்நோயாளியாக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதும் அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.5 விபத்துபதிவேட்டு அறிக்கைகளை பரிசீலிக்கையில் தெரியவருகிறது. மேற்படி அ.சா.1 மற்றும் அ.சா.2 க்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு.கே.எஸ்.முருகேசன், அ.சா.6 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

14) மேற்படி அ.சா.6 மருத்துவர் திரு.கே.எஸ்.முருகேசன், தனது முதல் விசாரணை சாட்சியத்தில், "நான் தற்போது கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தோல்நோய் சிறப்பு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.07.2018 ம் தேதி இரவு 09.40 மணியளவில் நான் பணியிலிருந்தபோது ஆறுமுகம் என்பவரை அவரது நண்பர் தினேஷ் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை நான் பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவர் தன்னை இரவு 08.45 மணியளவில் கங்கா பார்சல் அலுவலகத்தில் தூங்கி கொண்டிருந்தபோது தெரிந்த ஒரு நபர் கத்தி போன்ற ஆயுதத்தால் தாக்கியதாக ஏற்பட்ட காயங்கள் என கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது காயம் 1. 5x 2 cm எலும்பு ஆழமுடைய கிழிந்த காயம் தலையின் இடதுபுறத்தில் காணப்பட்டது. காயம் 2. 7x 2 cm எலும்பு ஆழமுடைய முக்கால்வாசி வெட்டுப்பட்ட இடது கட்டைவிரல் வெட்டுப்பட்டு காணப்பட்டது. காயம் 3. 2 x 1x 0.05 cm கிழிந்த காயம் இடது காதில் காணப்பட்டது. அவரை நான் உள்நோயளியாக அனுமதித்து சிகிச்சையளிக்கப்பட்டது. அவருக்கு இடது கைக்கு நுண்கதிர் படம்

எடுக்கப்பட்டது. அவருக்கு அதில் முதல் மெட்டாக்கார்ப் எலும்பு முறிவு காணப்பட்டது. முகத்திற்கு சி.டி ஸ்கேன் எடுக்கப்பட்டது. அதில் இடது முன்பக்க தலை left frontal எலும்பு உடைந்து காணப்பட்டது. அவருக்கு எலும்பு முறிவு மருத்துவர் அளித்த சிகிச்சையின் கருத்துரைப்படி அவர் மருத்துவரின் ஆலோசனைக்கு புறம்பாக தன்னிச்சையாக மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவர் மருத்துவமனையில் இருந்தபோது அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையின் அடிப்படையில் காயம் 1, காயம் 2 கொடுங்காயம் என சான்றளித்தேன். அன்றைய தினமே அதே சம்பவத்தில் காயமடைந்ததாக கார்த்திகேயன் என்பவரை அவரது நண்பர் தினேஷ் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை நான் பரிசோதித்தபோது அவர் தன்னை இரவு 08.45 மணியளவில் கங்கா பார்சல் சர்வீஸ் அலுவலகத்தில் தெரிந்த ஒரு நபர் கத்தி போன்ற ஆயுதத்தால் தன்னை தாக்கியதாகவும், அதனால் காயம் ஏற்பட்டதாகவும் கூறினார். அவருக்கு ஏற்பட்ட காயம் 1. 6x3 cm எலும்பு ஆழமுடைய கிழிந்த காயம் இடது மணிக்கட்டில் காணப்பட்டது. காயம் 2. 5x3 cm சதையளவு ஆழமுடைய கிழிந்த காயம் இடது முன்கையில் காணப்பட்டது. காயம் 3. 4x2 cm சதையளவு ஆழமுடைய கிழிந்த காயம் இடது முன்கையில் காணப்பட்டது. அவரை நான் உள்நோயாளியாக அனுமதிக்க பரிந்துரைத்தேன். போலிசார் என்னை விசாரித்தனர்" என்று கூறியுள்ளார்.

15) மேற்படி அ.சா.6ன் சாட்சியத்தை ஆராய்கையில், 29.07.2018 அன்று இரவு 09.40 மணியளவில் தினேஷ் என்பவர் அ.சா.1 கார்த்திகேயன், அ.சா.2 ஆறுமுகம் ஆகியோரை சிகிச்சைக்கு அழைத்து வந்ததும் அ.சா.2 ஆறுமுகத்தை பரிசோதித்தபோது அவருக்கு தலையின் இடதுபுறத்தில் 5x 2 cm எலும்பு ஆழமுடைய கிழிந்த காயமும், இடது கட்டைவிரலில் முக்கால்வாசி வெட்டப்பட்டு 7x 2 cm எலும்பு ஆழமுடைய காயம் காணப்பட்டதும், இடது காதில் 2 x 1x 0.05 cm கிழிந்த காயமும் காணப்பட்டதும் தெரியவருகிறது. மேலும் அவர் இடதுகைக்கு நுண்கதிர்படம் எடுக்கப்பட்டதில் அதில் முதல் மெட்டாகார்ப் எலும்புமுறிவு காணப்பட்டதும் முகத்திற்கு சி.டி ஸ்கேன் எடுக்கப்பட்டதும் தெரியவருகிறது. எனவே அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்றளித்ததும் தெரியவருகிறது.

16) மேலும் அ.சா.1 கார்த்திகேயனை பரிசோதித்தபோது அவருக்கு இடது மணிக்கட்டில் 6x3 cm எலும்பு ஆழமுடைய கிழிந்த காயமும், முன்கையில் 5x3 cm சதையளவு ஆழமுடைய கிழிந்த காயமும், இடது முன்கையில் 4x2 cm சதையளவு ஆழமுடைய கிழிந்த காயமும் காணப்பட்டது என்பதும் தெரியவருகிறது. பிறகு அ.சா.1 ஐ

மேல் சிகிச்சைக்காக 30.07.2018 அன்று மதியம் 02.00 மணியளவில் கரூர் ராஜ் ஆர்த்தோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்றது தெரியவருகிறது. அ.சா.1 க்கு சிசிச்சையளித்த மருத்துவர் திரு. ஆர். அன்பழகன் அ.சா.7 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

17) மேற்படி அ.சா.7 மருத்துவர் திரு. அன்பழகன், தனது முதல் விசாரணை சாட்சியத்தில், “நான் தற்போது கரூர் ராஜ் ஆர்த்தோ மருத்துவமனையில் எலும்பு முறிவு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 30.07.2018 அன்று இரவு 02.00 மணியளவில் பணியிலிருந்தபோது, கார்த்திகேயன் த/பெ. சுப்பிரமணியன் என்பவர் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார். அப்போது அவர் கரூர், கௌரிபுரத்திலுள்ள கங்கா பார்சல் சர்வீஸ் அருகில் அடையாளம் தெரிந்த நபர் கத்தியால் தாக்கியதால் இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டு அழைத்து வரப்பட்டார். அவரை பரிசோதனை செய்து உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று காயச்சான்றிதழ் வழங்கியுள்ளேன். மேற்சொன்ன ஆயுதத்தால் தாக்கப்படும்போது மேற்சொன்ன காயம் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிசார் என்னை விசாரித்தனர்" என்று கூறியுள்ளார்.

18) மேற்படி அ.சா.6 மற்றும் அ.சா.7 மருத்துவர்களின் சாட்சியத்தின் மூலம், சம்பவ தினத்தன்று அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களுக்கு வெட்டுக்காயமும், கிழிந்த காயமும், எலும்புமுறிவும் ஏற்பட்டுள்ளது என்று சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு உறுதிபடுத்தப்பட்டுள்ளது. மேற்படி அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் மேற்படி காயத்தை எதிரிதான் ஏற்படுத்தினார் என்று குற்றம் சாட்டியுள்ளனர். இவ்வழக்கில் சம்பவத்தின் போது சம்பவத்தை நேரில் பார்த்தாகவும் சம்பவத்தின் உடனிருநத்தாகவும் அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகியோர் அரசுதரப்பில் முன்னிருத்தப்பட்டுள்ளனர்.

19) மேற்படி நேரடி சாட்சியான அ.சா.3 தினேஷ்குமார், தனது முதல்விசாரணை சாட்சியத்தில், "கார்த்திகேயன் மற்றும் ஆறுமுகத்தை எனக்கு தெரியும். 29.08.2018 ம் தேதியில் சுமார் காலை 11.00 மணிக்கு ஆறுமுகமும் கார்த்திகேயனும் சண்டை போட்டுக்கொண்டதாக கேள்விப்பட்டு சம்பவம் நடந்த இடத்தைப் போய் பார்த்தேன். அங்கு ஒருவரும் இல்லை. இரவும் சண்டை நடந்ததாக கேள்விப்பட்டு அங்கு சென்று சம்பவ இடத்தைப் போய் பார்த்தோம். அங்கு யாரும் இல்லை. சம்பவ இடத்தில் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் என்ன நடந்தது என்று தெரியாது என்று சொன்னேன். நான் சண்டையை நேரில் பார்க்கவில்லை. ஆஜர் எதிரி யார் என்று

எனக்கு தெரியாது" என்று கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

20) அடுத்ததாக மற்றொரு நேரடி சாட்சியாக முன்னிருத்தப்பட்டுள்ள அ.சா.4 சதீஷ்குமார் தனது முதல்விசாரணை சாட்சியத்தில், "கார்த்திகேயன் மற்றும் ஆறுமுகம் மற்றும் தினேஷ் எனக்கு தெரியும். 29.08.2018 ம் தேதியில் சுமார் காலை 11.00 மணிக்கு ஆறுமுகமும் கார்த்திகேயன், விமல், மணி சண்டை போட்டுக்கொண்டதாக கேள்விபட்டேன். நான் சண்டையை நேரில் பார்க்கவில்லை. ஆஜர் எதிரி யார் என்று எனக்கு தெரியாது. போலிசார் விசாரணையில் சண்டை கட்டிக்கொண்டார்கள் என்று தான் சொன்னேன். அதைப் பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னேன்" என்று கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

21) மேற்படி அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகியோரது சாட்சியங்களை ஒருசேர ஆராயும்போது மேற்படி இருவரும் சம்பவத்தின் போது உடனிருந்ததாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தாகவும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் தங்களது சாட்சியங்களில் குறிப்பாக கூறியுள்ளனர். மேலும் சம்பவத்தில் அடிபட்ட தங்களை தினேஷ் என்பவர்தான் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தாகவும் கூறியுள்ளனர். அ.சா.ஆ.3 மற்றும் அ சா.ஆ.5 விபத்துபதிவேட்டு அறிக்கைகளை ஆராய்கையில், மேற்படி அ.சா.3 தினேஷ் என்பவர்தான் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களை மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்று சேர்த்தது தெரியவருகிறது. இந்நிலையில் அ.சா.3 மற்றும் அ.சா.4 இருவருமே வழக்கை பற்றி தங்களுக்கு தெரியாது என்று பிறழ்சாட்சியம் அளித்துள்ளது அவர்கள் ஏதோ ஒரு ஆதாயத்துக்காகவோ, அல்லது கட்டாயத்தின் பேரிலோ பிறழ்சாட்சியமாக ஆக்கப்பட்டுள்ளார்கள் என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களுக்கு சம்பவ தினத்தன்று கொடுங்காயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் நேரடி சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 மற்றும் அ.சா.4 இருவரும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளது அரசுதரப்பு வழக்கினை பாதிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

22) பொதுவாக காயம் ஏற்பட்டவருக்குதான் தனது உடலில் எங்கெங்கு காயம் ஏற்பட்டது என்றும் யாரால் காயம் ஏற்படுத்தப்பட்டது என்றும் தெளிவாக கூறி சாட்சியம் அளிக்க இயலும். அவ்வகையில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் சம்பவத்தினத்தன்று கௌரிபுரம் கங்கா பார்சல் சர்வீசில் இருந்தபோது எதிரி அங்கு அருவாளை எடுத்துவந்து கை, கால், தலை ஆகிய இடங்களில் வெட்டியதாவும் அதனை

தடுத்தபோது அ.சா.1 க்கு இடதுகையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது என்றும் அ.சா.2 ஆறுமுகத்திற்கு இடது நெற்றி, இடதுகாது, இடதுகை கட்டைவிரலிலும் வெட்டுக்காயம் ஏற்பட்டது என்றும் தங்களது முதல்விசாரணை சாட்சியங்களில் தெளிவாக கூறியுள்ளார். மேலும் தங்களின் சாட்சியங்களின்போது அ.சா.1 தனது இடதுகையில் ஏற்பட்ட வெட்டுக்காய தழும்பை காட்டியுள்ளார். அதேபோல அ.சா.2 தனது இடதுகை கட்டைவிரலில் வெட்டப்பட்ட இடத்தை காட்டியுள்ளார். மேற்படி வெட்டுக்காயங்கள் அனைத்தையும் எதிரிதான் ஏற்படுத்தினார் என்று தெளிவாகவும் உறுதியாகவும் சாட்சியம் அளித்துள்ளனர். நேரடி சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகியோர்கள் ஏதோ ஒரு ஆதாயத்திற்காக பிறழ்சாட்சிகளாக ஆகிவிட்ட சூழ்நிலையில் மேற்படி சம்பவத்தில் காயம் அடைந்த அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் எதிரியின் மீது குற்றம் சாட்டி கூறியுள்ள சாட்சியங்களை எளிதாக புறந்தள்ளிவிட முடியாது. இதுபோன்ற வழக்குகளில் நேரடி சாட்சிகள் பிறழ்சாட்சியம் ஆகிவிட்ட சூழ்நிலையிலும் பாதிக்கப்பட்ட நபர்களின் சாட்சியங்களே போதுமானது என்று மாண்புமிகு உயர்நீதிமன்றங்கள் மற்றும் உச்சநீதிமன்றங்கள் தீர்ப்பளித்துள்ளன. மேலும் தங்களுக்கு ஏற்பட்ட காயங்களானது எதிரியால்தான் ஏற்படுத்தப்பட்டது என்று அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் கூறியுள்ளனர். அவர்களுக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மைகளை ஆராய்கையில், அவர்களுக்கு அவர்களாகவே ஏற்படுத்தியிருக்க வாய்ப்பில்லை. அல்லது விபத்தின் மூலமாகவோ, வேறு ஏதாவது வகையிலோ ஏற்பட்டிருக்கவும் வாய்ப்பில்லை. பொதுவாக தன்னை வெட்டியவரை விட்டுவிட்டு அவருக்கு பதிலாக வேறு ஒருவர் தன்னை வெட்டினார் என்று பழி சொல்லி தன்னை வெட்டிய நபரை காப்பற்றுவதற்கும் வாய்ப்பில்லை. அவ்வகையில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் எதிரிதான் தங்களை வெட்டினார் என்று முதல்விசாரணை சாட்சியங்களில் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் கூறியுள்ளனர். எனவே அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட காயமானது எதிரியால்தான் ஏற்படுத்தப்பட்டது என்கிற அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

23) இந்நிலையில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் 21.07.2023 அன்று முதல்விசாரணை சாட்சியம் அளித்துள்ள நிலையில் சுமார் 3 வருடங்கள் கழித்து 24.03.2026 அன்று திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. மேற்படி அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில், “29.7.2018 ம் தேதி அ.சா.2 ஆறுமுகத்திற்கு பிறந்த தினம் என்றால் சரிதான். 29.7.2018 ம் தேதி அரசு தரப்பு

சாட்சிகளான தினேஷ் மற்றும் ஆறுமுகம், பிரேம்குமார் மற்றும் பால்கண்ணன் ஆகியோருக்கிடையே வாய்த்தகராறு ஏற்பட்டது என்றால் சரிதான். அப்போது எதிரி கோபிதான் சம்பவத்தை விலக்கி விட்டார் என்றால் சரிதான். 29.7.2018 ம் தேதி இரவு 8.45 மணியளவில் கௌரிபுரம் கங்கா பார்சல் சர்வீஸ் அருகில் மின்விளக்குகள் எதுவும் இல்லை என்றாலும், அந்த பகுதி இருட்டான பகுதி என்றாலும் சரிதான். அந்த நேரத்தில் சுமார் 10 பேர் இருந்தோம். அன்று ஆறுமுகத்திற்கு பிறந்தநாள் என்றதால் நாங்கள் மதுபோதையில் இருந்தோம் என்றால் சரிதான். அப்போது எங்களுக்குள் ஏற்பட்ட தள்ளுமுள்ளு காரணமாக எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். அ.சா.2 ஆறுமுகத்திற்கு எதனால் எப்படி காயம் ஏற்பட்டது என்று தெரியாது என்றால் சரிதான். புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். வெற்றுத்தாளில் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் எதிரியால்தான் எனக்கு காயம் ஏற்பட்டதாக சொல்லியதற்கு காரணம் போலீசார் சொல்லியதன் காரணமாக தவறாக சொன்னேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சம்பவ நேரத்தில் எதிரி அந்த இடத்தில் இல்லை, நான் அவரைப் பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரி கோபியால் எனக்கும், அ.சா.2 ஆறுமுகத்திற்கும் காயம் ஏற்பட்டது என்பதை என்னால் உறுதியாக சொல்ல முடியாது அப்போது நான் மதுபோதையில் இருந்தேன். மதுபோதையில் எங்களுக்குள் ஏற்பட்ட தள்ளுமுள்ளினால் என்ன நடந்தது என்று தெரியாது. எனக்கும் தினேஷ்குமார், சதீஷ்குமார் ஆகியோருக்கும் எந்த முன்விரோதமும் கிடையாது என்றால் சரிதான். எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான்" என்று கூறியுள்ளனர்.

24) அதேபோல அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில், “29.7.2018 ம் தேதி எனக்கு பிறந்த தினம் என்றால் சரிதான். 29.7.2018 ம் தேதி அரசு தரப்பு சாட்சிகளான அ.சா.1 கார்த்திகேயன், தினேஷ் மற்றும் நான், பிரேம்குமார் மற்றும் பால்கண்ணன் ஆகியோருக்கிடையே வாய்த்தகராறு ஏற்பட்டது என்றால் சரிதான். அப்போது எதிரி கோபிதான் சம்பவத்தை விலக்கி விட்டார் என்றால் சரிதான். 29.7.2018 ம் தேதி இரவு 8.45 மணியளவில் கௌரிபுரம் கங்கா பார்சல் சர்வீஸ் அருகில் மின்விளக்குகள் எதுவும் இல்லை என்றாலும், அந்த பகுதி இருட்டான பகுதி என்றாலும் சரிதான். அந்த நேரத்தில் சுமார் 10 பேர் இருந்தோம். அன்று எனக்கு பிறந்தநாள் என்றதால் நாங்கள் மதுபோதையில் இருந்தோம் என்றால் சரிதான். அப்போது எங்களுக்குள் ஏற்பட்ட தள்ளுமுள்ளு காரணமாக எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். எனக்கு எதனால் எப்படி காயம் ஏற்பட்டது என்று தெரியாது என்றால் சரிதான். புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். வெற்றுத்தாளில் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். முதல்

விசாரணையில் எதிரியால்தான் எனக்கு காயம் ஏற்பட்டதாக சொல்லியதற்கு காரணம் போலீசார் சொல்லியதன் காரணமாக தவறாக சொன்னேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சம்பவ நேரத்தில் எதிரி அந்த இடத்தில் இல்லை. நான் அவரை பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரி கோபியால் எனக்கும், அ.சா.1 கார்த்திகேயனுக்கும் காயம் ஏற்பட்டது என்பதை என்னால் உறுதியாக சொல்ல முடியாது அப்போது நான் மதுபோதையில் இருந்தேன். மதுபோதையில் எங்களுக்குள் ஏற்பட்ட தள்ளுமுள்ளினால் என்ன நடந்தது என்று தெரியாது. எனக்கும் தினேஷ்குமார், சதீஷ்குமார் ஆகியோருக்கும் எந்த முன்விரோதமும் கிடையாது என்றால் சரிதான். எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். எதிரி வழக்கிலிருந்து விடுவிக்கப்பட வேண்டியவர் என்றால் சரிதான்“ என்று கூறியுள்ளார்.

25) அ.சா.1 மற்றும் அ.சா.2ன் குறுக்குவிசாரணைகளை ஆராய்கையில், சம்பவத்தின் போது தாங்கள் மதுபோதையில் இருந்தோம் என்றால் சரிதான் என்றும் அப்போது தங்களுக்கு ஏற்பட்ட தள்ளுமுள்ளு காரணமாக காயம் ஏற்பட்டது என்றால் சரிதான் என்றும் புகாரில் வெற்றுத்தாளில் கையொப்பம் போட்டோம் என்றால் சரிதான் என்றும் முதல்விசாரணையில் எதிரியால்தான் காயம் ஏற்பட்டதாக போலிசார் சொல்லியதன் காரணமாக தவறாக சொன்னேன் என்றால் சரிதான் என்றும் சம்பவயிடத்தில் எதிரி இல்லை என்றும் தாங்கள் அவரைப் பார்க்கவில்லை என்றால் சரிதான் என்றும் எதிரியை விடுவிக்கவேண்டும் என்றால் சரிதான் என்றும் ஒருமித்து கூறியுள்ளனர். பொதுவாக விடைபொதி வினாக்களை (Leading questions) குறுக்கு விசாரணையில் கேட்கலாம் என்றபோதிலும் முதல்விசாரணையில் தங்களுக்கு ஏற்பட்ட காயம் எதிரியால்தான் ஏற்படுத்தப்பட்டது என்று கூறியுள்ளநிலையில் சுமார் 3 வருடங்கள் கழித்து செய்யப்பட்ட குறுக்கு விசாரணையில் முதல்விசாரணை சாட்சியத்திற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதை பார்க்கும்போது அவர்களை கட்டாயப்படுத்தப்பட்டோ அல்லது ஆதாயத்திற்குட்படுத்தப்பட்டோ சாட்சியம் அளிக்க வைத்துள்ளது தெரியவருகிறது. மாண்புமிகு உச்சநீதிமன்றம் Selvamani Vs State represented by Inspector of Police (2024 INSC 393) என்ற வழக்கில் முதல்விசாரணை செய்யப்பட்டு அதீத காலத்திற்கு பிறகு குறுக்கு விசாரணையில் முதல்விசாரணைக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்தாலோ அல்லது பிறழ்சாட்சியம் அளித்தாலோ அது அரசுதரப்பு வழக்கினை பாதிக்காது என்ற தீர்ப்பளித்துள்ளது. மேலும் காயம் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் (Hurt cases) வழக்குகளில் மற்ற சாட்சிகள் பிறழ்சாட்சியம் ஆகிவிட்டாலும் கூட பாதிக்கப்பட்ட நபர் மற்றும் அவருக்கு சிகிச்சையளித்த மருத்துவரின்

சாட்சியத்தினை வைத்து மட்டுமே அவ்வழக்கினை தீர்மானிக்கலாம் என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் **Alagupandi@Alagupandian** Vs State of Tamil Nadu (Crl. A.No.1315/2009 dated 08.05.2012) என்ற வழக்கில் கூறியுள்ளது. எனவே இவ்வழக்கினைப் பொறுத்து அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் தங்களது முதல்விசாரணை சாட்சியங்களில் எதிரிதான் தங்களுக்கு காயம் ஏற்படுத்தினார் என்று கூறியுள்ள நிலையில் மிகவும் காலதாமதமாக செய்யப்பட்ட குறுக்கு விசாரணையில் முதல்விசாரணைக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளது அரசுதரப்பு வழக்கினை பாதிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

26) இவ்வழக்கில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ தாக்கி காயத்தை ஏற்படுத்த பயன்படுத்தியதாக சொல்லப்பபடும் ஆயுதமானது அருவாள் என்று அ.சா.ஆ.1 புகார் மனுவில் கூறப்பட்டுள்ளது. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் தங்களது முதல்விசாரணை சாட்சியங்களில் எதிரி தங்களை அரிவாளால் வெட்டியதாகதான் சாட்சியம் அளித்துள்ளனர். ஆனால் சிகிச்சைக்கு சேர்ந்தபோது தங்களை ஒருநபர் கத்தி போன்ற ஆயுதத்தால் தாக்கியதாக மருத்துவரிடம் கூறியுள்ளனர். மேற்படி அருவாளையோ அல்லது கத்தியையோ இவ்வழக்கில் கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை. மேலும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களுக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டுள்ளதாக மருத்துவர் சாட்சியம் அளித்துள்ளநிலையில் அதனை நிரூபிப்பதற்கு நுண்கதிர்படம், சி.டி ஸ்கேன் உள்ளிட்ட ஆவணங்களை ஆதாரமாக தாக்கல் செய்யவில்லை. பொதுவாக கொடுங்காயம் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் வழக்குகளில் கொடுங்காயம் ஏற்பட்டதை நிரூபிக்க காயச்சான்றிதழுடன் சேர்த்து மேற்படி நுண்கதிர்படம் மற்றும் சி.டி ஸ்கேன் போன்ற கூடுதல் மருத்துவ ஆவணங்களையும் உறுதியூட்டுவதற்காக தாக்கல் செய்யப்படவேண்டும். ஆனால் இவ்வழக்கில் மேற்படி ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களுக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டது என்று மருத்துவர்களின் வாய்மொழி சாட்சியங்களை தவிர உறுதியூட்டும் சாட்சியங்களான நுண்கதிர்படம் மற்றும் சி.டி ஸ்கேன் ஆகியவை எடுந்திருந்தும் அதனை தாக்கல் செய்து நிரூபிக்கப்படாத நிலையில் எதிரியின் மீது சாட்டப்பட்ட இதச பிரிவு 326 ஆனது போதுமான அளவு சான்றாவணங்களுடன் நிரூபிக்கப்படவில்லை என்றும் மாறாக இதச பிரிவு 323 ன் வகைமுறைகளின்படி தன்னிச்சையாக காயம் விளைவித்த குற்றச்சாட்டானது நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

27) அடுத்ததாக எதிரி அ.சா.1 ஐப் பார்த்து தகாத வார்த்தைகளால் திட்டியதாக சொல்லப்படும் குற்றச்சாட்டினை ஆராய்கையில், இதச பிரிவு 294(பி)ன் வகையங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமானால் பொது இடத்தில் வைத்து தகாத வார்த்தைகளால் திட்டியிருக்கவேண்டும். அவ்வாறு திட்டியது மற்றவர்கள் முன்னிலையில் அவமானம் ஏற்படுத்துவதாக இருத்தல்வேண்டும். இவ்வழக்கில் சம்பவயிடமானது கரூர் கௌரிபுரத்தில் உள்ள கங்கா பார்சல் அலுவலகத்தில் வைத்து நடந்ததாக அ.சா.ஆ.1 புகார் மனுவிலும், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் அளித்த நீதிமன்ற சாட்சியத்திலும் கூறியுள்ளனர். மேலும் அ.சா.ஆ.8 மாதிரிவரைபடத்தில் சம்பவயிடமானது ஸ்ரீகங்கா பார்சல் சர்வீஸ் அலுவலகத்தின் உள்ளே நடந்ததாக காட்டப்பட்டுள்ளது. எனவே மேற்படி சம்பவ இடம் பொதுயிடம் இல்லை என்பதும் தனியார் இடம் என்பதும் தெரியவருகிறது. மேலும் எதிரி தகாத வார்த்தைகளால் திட்டியதால் மற்றவர்கள் முன்னிலையில் தொந்தரவாகவும் அவமானமாகவும் இருந்தது என்று அ.சா.1 குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே எதிரியின் மீது சாட்டப்பட்ட மேற்படி குற்றச்சாட்டானது அரசுதரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

28) அடுத்ததாக எதிரி அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐப் பார்த்து அருவாளைக் காட்டி கொலைமிரட்டல் விடுத்ததாக சொல்லப்படும் குற்றச்சாட்டினை ஆராய்கையில், அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில், **"உடனே அருகில் இருந்த எனது நண்பர்கள் அவரைப் பிடிக்க முயல அருவாளைக் காட்டி இன்னைக்கு தப்பிச்சுட்டீங்க என்னைக்கிருந்தாலும் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு அருவாளுடன் ஓடிவிட்டான்"** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்டவாறே அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் தங்களது முதல்விசாரணை சாட்சியங்களிலும் சாட்சியம் அளித்துள்ளனர். பொதுவாக இ.த.ச.506 ன் படி ஒரு வழக்கு நிரூபிக்கப்படவேண்டுமெனில் ஒரு நபர் கொலை மிரட்டல் செய்யும்போது மற்றொரு நபர் அந்த கொலை மிரட்டல் செய்த நபரால் தனது உயிருக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்ற அச்ச உணர்வு அச்சம்பவ இடத்தில் ஏற்பட்டிருக்கவேண்டும். இவ்வழக்கில் சம்பவத்தின்போது எதிரி அ.சா.1 மற்றும் .அ.சா.2 ஆகியோர்களை அருவாளால் வெட்டி கொடுங்காயங்கள் ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆனால் கொடுங்காயம் ஏற்படுத்தியதற்குண்டான கூடுதல் மருத்துவ ஆவணங்களை இவ்வழக்கில் அரசுதரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. அதேபோல எதிரி காயம் விளைவிக்க பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதத்தையும் இவ்வழக்கில்

எதிரியிடமிருந்து கைப்பற்றி சான்றுப்பொருளாக தாக்கல் செய்யப்படவில்லை. இருப்பினும் சம்பவத்தின்போது அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களுக்கு எதிரியால் காயம் ஏற்படுத்தப்பட்டுள்ளது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வெறும் ஆயுதத்தை காட்டி போகிற போக்கில் கொலைமிரட்டல் விடுத்திருந்தால் அதனை கொலைமிரட்டல் விடுத்ததாக கருத இயலாது. மாறாக அந்த கொலைமிரட்டல் காரணமாக சம்பவயிடத்திலே தனக்கு உடனடியாக மரணபயம் ஏற்பட்டிருக்கவேண்டும். இவ்வழக்கில் அவ்வாறு தங்களுக்கு மரணபயம் ஏற்பட்டதாக சாட்சிகள் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காதபோதிலும் எதிரி உபயோகப்படுத்திய ஆயுதத்தினால் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களுக்கு கிழிந்த காயம் மற்றும் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது தெரியவருகிறது. ஒருவேளை எவ்வித காயத்தையும் ஏற்படுத்தாமல் வெறுமனே ஆயுதத்தை மட்டும் கையில் வைத்திருந்து கொலைமிரட்டல் விடுத்ததாக குற்றம் சாட்டப்பட்டிருப்பின் அதன் காரணமாக சம்பவயிடத்திலேயே உடனடியாக மரணபயம் ஏற்பட்டது என்று கருத இயலாது. ஆனால் இவ்வழக்கில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களுக்கு எதிரியால் ஏதோ ஒரு ஆயுதத்தால் கொடுங்காயம் ஏற்படுத்தப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் எதிரி அ.சா.1 மற்றும் அ.சா2 ஆகியோர்களுக்கு கூர்மையான ஆயுதத்தின் மூலமாக காயம் ஏற்படுத்திய நிலையில் அந்த ஆயுதத்தைக் காட்டி எதிரி விடுத்த கொலைமிரட்டல் காரணமாக சம்பவயிடத்திலேயே மரணபயம் ஏற்பட்டுள்ளது என்றும் எனவே மேற்படி குற்றச்சாட்டினைப் பொறுத்து அரசுரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

29) எனவே மேற்கண்டவாறு விவாதங்கள் மற்றும் சாட்சிய சான்றாவணங்களை பரிசீலித்ததின் அடிப்படையில் எதிரியின் மீது சாட்டப்பட்ட இ.த.ச. 294(b), 326 பிரிவுகளின் படியான குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை எனவும் அதேசமயம் இதச 323 மற்றும் 506(ii) பிரிவுகளின் படியான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

எதிரிக்கு அளிக்கப்படவிருக்கும் தண்டனை குறித்து குவிமுச பிரிவு 248(2) ன் படி வினவிய போது அவர் பின்வருமாறு பதிலளித்தார்.

குறைந்தபட்ச தண்டனை விதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என பதிலளித்தார்.

30) முடிவில், மேற்படி அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரியின் மீதான இ.த.ச. 294(b), 326 பிரிவுகளின் படியான குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை எனவும் அதேசமயம் இதச 323 மற்றும் 506(ii) பிரிவுகளின் படியான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக முடிவு கண்டு எதிரியை தண்டிக்கும் முகமாக இதச பிரிவு 323 ன் படியான குற்றத்திற்கு ரூ.1000/- அபராதம் விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் 1 மாதம் மெய்க்காவல் சிறைதண்டனை விதித்தும், இதச பிரிவு 506(ii)ன் படியான குற்றத்திற்கு ரூ.1000/- அபராதம் விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் 1 மாதம் மெய்க்காவல் சிறைதண்டனை விதித்தும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.
(மொத்த அபராதத் தொகை- ரூ.2000/-).

31) இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் வடிக்கப்பட்டு, பின்னர் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 15.04.2026 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

BARATH KUMAR
Digitally signed by BARATH KUMAR
Date: 2026.04.15 18:33:17 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

**<u>அரசுதரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் :-</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | கார்த்திகேயன் |
| அ.சா.2 | ஆறுமுகம் |
| அ.சா.3 | தினேஷ்குமார் |
| அ.சா.4 | சதிஷ்குமார் |
| அ.சா.5 | பிரேம்குமார் |
| அ.சா.6 | மருத்துவர் திரு. முருகேசன் |
| அ.சா.7 | மருத்துவர் திரு. அன்பழகன் |
| அ.சா.8 | திரு. பத்மசீலன், சிறப்பு உதவி ஆய்வாளர் |

**<u>அரசுதரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்:-</u>**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.3 | விபத்துபதிவேட்டு அறிக்கை |
| அ.சா.ஆ.4 | காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.5 | கார்த்திகேயனுக்கு வழங்கப்பட்ட விபத்துபதிவேட்டு அறிக்கை |
| அ.சா.ஆ.6 | காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.7 | முதல்தகவல்அறிக்கை |
| அ.சா.ஆ.8 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.9 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**<u>அரசுதரப்பு சான்று பொருள் :-</u>**

**இல்லை**

**<u>எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருள்கள் :-</u>**

**இல்லை**

BARATH KUMAR
Digitally signed by BARATH KUMAR
Date: 2026.04.15 18:33:27 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

| | | |
|---|---|---|
| 15.04.2026<br><br>**சிசி.எண். 416/2022**<br><br>எதிரி ஆஜர். இவ்வழக்கில் முன் வைக்கப் பட்ட வாய் மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது. தீர்ப்பு அவையறியப் பகரப்பட்டது.<br><br>முடிவில், மேற்படி அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரியின் மீதான இ.த.ச. 294(b), 326 பிரிவுகளின் படியான குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை எனவும் அதேசமயம் இதச 323 மற்றும் 506(ii) பிரிவுகளின் படியான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக முடிவு கண்டு எதிரியை தண்டிக்கும் முகமாக இதச பிரிவு 323ன் படியான குற்றத்திற்கு ரூ.1000/- அபராதம் விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் 1 மாதம் மெய்க்காவல் சிறைதண்டனை விதித்தும், இதச பிரிவு 506(ii)ன் படியான குற்றத்திற்கு ரூ.1000/- அபராதம் விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் 1 மாதம் மெய்க்காவல் சிறைதண்டனை விதித்தும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.<br>(மொத்த அபராதத் தொகை- ரூ.2000/-).<br><br>இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.<br><br>BARATH KUMAR Digitally signed by BARATH KUMAR Date: 2026.04.15 18:33:38 +0530<br><br>**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்.** | | |